பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 01 | வியாழக்கிழமை | 17.05.2025 | அதிர்வு 347

## மாநகர சபையின் அமர்வை நேரலையில் ஒளிபரப்பிய சைக்கிள் கட்சி உறுப்பினர்

### மேயர் கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வை முகநூல் ஊடாக நேரலையில் ஒளிபரப்பிய அகில 06



# என் திட்டத்தை மாற்றினால் பொருளாதார நெருக்கடி!


### மீண்டும் வரும் என்று அநுர அரசுக்கு ரணில் எச்சரிக்கை

“இலங்கையின் பொருளாதார மீட்சிக்காகச் சிறந்த திட்டத்தை அமுல்படுத்தினேன். அந்தத் திட்டத்தை அநுர அரசு முறையாகச் செயற்படுத்த வேண்டும். அரசியல் பிரபல்யத்துக்காக ஏற்றுக் கொண்ட இணக்கப்பாடுகளை மாற்றியமைத்தால் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06

# நீண்ட நேரமாக நடைபெற்ற யாழ். மாநகர சபை அமர்வு

### நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பிலும் விவாதம்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய சபை அமர்வுகள் நீண்ட நேரமாக இடம்பெற்றதோடு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பிலும் சபை உறுப்பினர்களால் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சபை அமர்வு நேற்று மாநகர சபை சபா மண்டபத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

சுகாதாரக் குழு, நிதிக் குழு 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தம்மை இடைநிறுத்தி கட்சி எடுத்த முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரி வலிகாமம் வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் இராஜேந்திரம் தாக்கல் செய்த வழக்கில், இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கையை நிராகரித்து யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்து விட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினரான இராஜேந்திரம் பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் தெரிவுகளின் போதும், தெரிவுக்கான தேர்தல் முறைமை தொடர்பிலும் கட்சி நிலைப்பாட்டுக்கு மாறாக சபை அமர்வில் நடந்து கொண்டார் என்று தெரிவித்து, அதற்காக அவரிடம் விளக்கம் கோரியும், அவரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தியும் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் அவருக்கு அறிவித்திருந்தார்.

அதற்கு எதிராகவே இந்த வழக்கு.

இப்படி தமிழரசு கட்சியில் குதர்க்கமாக நடந்து கொண்ட பலருக்கு எதிராக 06



## வருடத்துக்கு 6 கோடி ரூபா நிதி வழங்கியும்

# யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றல் முறையாக இடம்பெறவில்லை

### தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கபிலன் குற்றச்சாட்டு

(பிரபாகரன் டிலக்சன்)

"யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் உழவு இயந்திரங்கள் மூலம் கழிவகற்றுவதற்கு ஒரு கிலோ மீற்றருக்கு 210 ரூபா வீதம் மாதம் 50 இலட்சம் ரூபாவும், வருடத்துக்கு 6 கோடி ரூபாவும் சபை நிதியில் இருந்து வழங்கப்படுகின்றது. ஆனால், கழிவகற்றல் முறையாக இடம்பெறவில்லை."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் கபிலன் சுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது மாநகர சபைக்குச் சொந்தமான 17 உழவு இயந்திரங்கள் மூலமும், இரண்டு கழிவு சேகரிக்கும் வாகனங்கள் மூலமும், 16 தனியார் உழவு இயந்திரங்கள் மூலமும் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் உழவு இயந்திரங்கள் மூலம் கழிவகற்றுவதற்கு ஒரு கிலோ மீற்றருக்கு 210 ரூபா வீதம் மாதம் 50 இலட்சம் ரூபாவும், வருடத்துக்கு 6 கோடி ரூபாவும் சபை நிதியில் இருந்து வழங்கப்படுவதாக சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் கபிலன் கருத்துத் தெரிவிக்கையில்,

"தனியார் உழவு இயந்திரங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளின் கழிவகற்றலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கல்லுண்டாய் வெளியில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்பட்டிருந்தன. அங்கு வலிப்புக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் மருத்துவக் கழிகள் எரியூட்டுள்ளன. அவை தொடர்பான வீடியோ ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

மாதம் 50 இலட்சம் ரூபா செலவழித்து கழிவகற்றல் இடம்பெற்றிருந்தால் கல்லுண்டாயில் குப்பைகள் மலைபோல் குவிந்து இருக்க வேண்டும். ஆனால், கல்லுண்டாய் வெளியில் குப்பைகள் நில மட்டத்தோடு இருக்கின்றன. குப்பைகள் எரிந்த நிலையில் உள்ளன. இங்கு குப்பைகள் யாராலும் திட்டமிட்டு எரியூட்டப்படுகின்றதா? அல்லது தானாகத் தீப் பிடிக்கின்றதெனில் அது எவ்வளவு பயங்கரமானது என்பது தொடர்பில் நாம் ஆராய வேண்டும். இந்த விடயம் தொடர்பில் நிபுணர்களின் விஞ்ஞானபூர்வமான அறிக்கை பெறப்பட வேண்டும்.

கல்லுண்டாய் வெளியில் இறைச்சிக் கழிவுகள், பம்பஸ்கள், மருத்துவக் கழிவுகள் என்பன காணப்படுகின்றன. இவை தொடர்பில் முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் நிலத்தை மட்டப்படுத்த முடியாது.

திண்மக் கழிவகற்றலுக்காக வருடத்துக்கு 6 கோடி ரூபாவைச் செலவழித்த போதும் அங்கு காணப்படும் குப்பைகளின் அளவு குறைவாகவே உள்ளது. குப்பைகள் காலகாலமாகத் தொடர்ந்தும் எரியூட்டப்பட்டு வருகின்றன. அயலில் உள்ள பொதுமக்கள் இதற்குச் சாட்சி. கல்லுண்டாய் வெளியில் மருத்துவக் கழிவுகள் இருப்பதால் திட்டமிடப்பட்டு எரியூட்டப்படலாம் என்ற சந்தேகம் உளது. இதனைத் தடுப்பதற்காக யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான 17 உழவு இயந்திரங்கள் மாத்திரமே மருத்துவக் கழிவுகளைச் சேகரிக்க வேண்டும். அதன் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் உடன் இருக்க வேண்டும்.

திண்மக் கழிவகற்றல் முறையாக முகாமை செய்யப்பட வேண்டும். கழிவகற்றல் முறைமைகளுக்காக நிதி ஒதுக்குவதற்கு மத்திய அரசு தயாராக வுள்ளது. இதனை மத்திய அரசின் பிரதிநிதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

தனியார் உழவு இயந்திரங்களால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் தொடர்ந்தும் அவதானிக்கப்பட வேண்டும். தனியார் கழிவகற்றலில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. இது பற்றிய தரவுகள் எங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.

### யாழ். பல்கலை. மருத்துவ பீட மாணவர்களுக்கு

# பஸ் வாங்குவதற்கான இசை நிகழ்வுக்கு 30 சதவீத வரி விலக்கே வழங்க முடியும்!

## மாநகர சபை அமர்வில் தீர்மானம்




(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் போக்குவரத்துக்கான பஸ் கொள்வனவுக்கு நடத்தப்படும் இசை நிகழ்ச்சிக்கு முழுமையான வரி விலக்கு கோரிய நிலையில் 30 சதவீத வரி விலக்கே வழங்க முடியும் என யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் சபை அமர்வு நேற்று மாநகர சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கான பஸ் கொள்வனவுக்காக யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சிக்கு முழுமையான வரிவிலக்கு கோரிய கோரிக்கை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தால் யாழ். மாநகர சபையிடம் முன்வைக்கப்பட்டது.

இதன்போது 25 சதவீத வரிச்சலுகை வழங்குவது என மாநகர சபை நிதிக் குழுவில் தீர்மானிக்கப்பட்டமை தொடர்பில் சபையில் அனுமதிக்காக விவாதிக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த இசை நிகழ்ச்சி மருத்துவ பீட மாணவர்களின் வாகனக் கொள்வனவுக்காக இடம்பெறுவதால் இதற்கு 50 சதவீத வரி விலக்கு கொடுக்கலாம் என்ற யோசனை யாழ். மாநகர மேயரால் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ். மாநகர சபையின் உறுப்பினர் ப.தர்சானந் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்த இசை நிகழ்ச்சிக்கு 50 சதவீத வரி விலக்கு வழங்கத் தேவையில்லை. இசை நிகழ்ச்சிக்கான ஆரம்பக் கட்டணம் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 25 ரூபா வரை உள்ளது. யாழ். மாநகர சபைக்கான கோரிக்கைக் கடிதத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் மருத்துவப் பயிற்சிகளைப் பெறுவதற்கான போக்குவரத்துக்காக பஸ் கொள்வனவு எனக் கூறினார்கள். ஆனால், மருத்துவ பீட மாணவர்கள் ஒரு ஊடக சந்திப்பில் பஸ் தங்கள் விரிவுரைகளுக்கும் பயன்படுத்தப்படும் எனக் கூறுகின்றார்கள். எனவே, 25 சதவீத வரி விலக்கை வழங்குவது சரியாக இருக்கும்." – என்றார்.

சில உறுப்பினர்கள் மாணவர்களுக்கு 50 சதவீத வரி விலக்கை வழங்கலாம் எனவும், 50 சதவீதமான வரி விலக்கை வழங்கக்கூடாது எனவும் தங்கள் விவாதங்களை முன்வைத்தார்கள்.

இதன்பின்னர் உறுப்பினர் சு.கபிலன் கருத்துத் தெரிவிக்கையில்,

"இசை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் இந்தியாவில் இருந்து வரும் கலைஞர்களின் செலவுகள் குறைக்கப்பட்டு சமூக நலனாக மாத்திரம் நிகழ்ச்சி இடம்பெறுகின்றதா என்பதை ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்தினால் அவர்களுக்குத் தேவையான மேலதிகமான வரிச் சலுகைகளை வழங்கலாம்." – என்றார்.

பின்னர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட இசை நிகழ்ச்சிக்கு 30 சதவீத வரி விலக்கு வழங்குவது என நீண்ட விவாதங்களின் பின் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றுக்கு 50 சதவீத வரி விலக்கு வழங்குவதாக நிதிக் குழுவில் தீர்மானித்த நிலையில் சபை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

மருத்துவ பீட மாணவர்களின் இசை நிகழ்ச்சிக்கு 30 சதவீத ஒதுக்கீட்டை வழங்கிவிட்டு உள்ளூர் திரைப்படத்துக்கு 50 சதவீத வரிவிலக்கு வழங்குவதா என உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும், அந்த உள்ளூர் திரைப்படத்தின் 50 சதவீத வரி விலக்கு அண்ணளவாக 12 ஆயிரம் ரூபா எனவும், ஆனால் மருத்துவ பீட மாணவர்களின் இசை நிகழ்ச்சிக்கு 50 சதவீத வரி ஒதுக்கீடு மூன்று இலட்சம் வரை செல்லலாம் எனவும் கூறப்பட்டது.

உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக அந்தத் திரைப்படத்துக்கு 50 சதவீத விலைக்கழிவை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தொடர்ந்து திரைப்படங்களுக்கு வரிச் சலுகை வழங்கினால் சபையில் வருமான இழப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் களியாட்ட நிழ்வுகளுக்கு வரிச் சலுகை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பது எனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

# ரயில் மோதியதில் குடும்பஸ்தர் பலி



(எஸ்.ரகுதீஸ்)

ரயில் கடவையைக் கடந்த குடும்பஸ்தர் ஒருவர் ரயில் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பூதராயர் சிவன் கோவிலடி, திருநெல்வேலியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்தரக்குருக்கள் ஞானசர்மா (வயது 55) என்பவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் கமநல சேவை திணைக்களத்தில் கடமையாற்றியுள்ளார். அவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் கடிதம் ஒன்றை வழங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது ஏ–9 வீதியில் உள்ள ரயில் கடவையை நண்பகல் 12 .40 மணியளவில் கடக்க முற்பட்டுள்ளார்.

அப்போது, கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி சென்ற கடுகதி ரயில் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# செம்மணி மனிதப் புதைகுழி குறித்து நீதியான விசாரணை

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டவல தெரிவிப்பு



செம்மணி புதைகுழி விவகாரம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டவல தெரிவித்தார்.

குறிப்பாக செம்மணி தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அரசு அந்த நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் கூறினார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர்,

“மேற்படி விவகாரங்கள் தொடர்பில் எம்மிடம் உள்ள தகவல்களை நாம் வெளியிட மாட்டோம். அவற்றை வெளியிட்டால் அதைப் பெற்றுக்கொள்வோர் அதனை எவ்வாறான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவார்கள் எனத் தெரியாது. இந்த விடயங்களில் எவரது அவசரத்துக்கும் ஏற்ப எம்மால் செயற்பட முடியாது.

கடந்த அரசு அவ்வாறு செயற்பட்டாலும் எமது அரசு ஒருபோதும் அவ்வாறு செயற்படாது. அரசு என்ற வகையில் நாம் மிகவும் பொறுப்புடன் செயற்படுவோம்.” – என்றார்.





# இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்

## கோமரங்கடவல பிரதேச செயலகத்தில் நேற்று

(முஹம்மட் றிஸ்னாத்)

நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக் கோரி கோமரங்கடவல பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை, கோமரங்கடவல பிரதேச செயலகத்தில் நேற்று பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் நடைபெற இருந்த நேரத்தில், மாவட்ட செயலகத்தால் நிறுத்தப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைஒபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரதேச செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

பல வருட காலமாக கோமரங்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் இடமாற்றம் கிடைக்காமல் பலர் இருக்கின்றபோது, சிலர் நகர்ப் பகுதியில் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக இந்த இடமாற்றத்தை நிறுத்தியுள்ளனர் எனவும், முறையான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும். அவர்கள் தெரிவித்தனர்.

“என்.பி.பி. ஆட்சியில் அரச ஊழியர்களுக்கு அநீதியா?”, “அவசியம் இடமாற்றம் வேண்டும்”, “வேலை கிடைத்தது முதல் ஓய்வு காலம் வரை இங்கு தானா?” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன மற்றும் அதிகாரிகளை உள்ளே செல்ல விடாமல் தடுத்து தமக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தை நடத்துவதற்கு இடமளிக்குமாறும், தங்களுடைய கோரிக்கைக்கு சிறந்த தீர்வினை பெற்று தருவார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியமையை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒழுக்காற்று நடவடிக்கை பாய்ந்திருக்கிறது. அவர்களின் வேறு யாரேனும் இவ்வாறு வழக்குக்கு போனால் என்ன நடக்கும் என்பதற்கு இந்த வழக்கு முன்னுதாரணமாக வந்திருக்கின்றது. 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்பது போல வழக்கு விடயத்துக்கு போவது என்னாகும் என்பதற்கு இது நல்ல படிப்பினையும் கூட.

பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் தேர்வு தொடர்பாகக் கட்சியின் நிலைப்பாடு தமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

அது குறித்து சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டேன்.

"அவர் சொல்வது தவறு. மேற்படி சபையின் கூட்டத்திற்கு முன்னர் நானே அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயங்களை விளங்கப்படுத்தினேன். சபைத் தவிசாளராகவும் உப தவிசாளராகவும் யார், யாரைக் கட்சி தெரிவு செய்திருக்கின்றது என்பதை அவருக்கு தெரியப்படுத்தினேன். அதற்கு மாறாக, அவரின் பெயரை அப்பதவிகளுக்கு வேறு யாரேனும் பிரேரித்தால் கூட, போட்டிக்கு நிற்காமல், அதனை நீங்களாகவே வாபஸ் பெற்று விட வேண்டும் என்பவற்றையெல்லாம் அவருக்குத் தெளிவாகச் சொன்னேன். அவர் ஏற்றுக்கொண்டு சம்மதித்து விட்டுத்தான் இப்படி நடந்து கொண்டார் அதனால்தான் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை கட்சி எடுத்தது." – என்று சுமந்திரன் விளங்கப்படுத்தினார்.

இந்த வழக்கில் இரண்டு வேறு விடயங்களும் கவனிக்கப்பட வேண்டும்.

ஒன்று – இந்த இராஜேந்திரம் என்ற நபரை கட்சியிலிருந்து இடைநிறுத்தும் முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், அதனை ஆட்சேபித்துக் கடிதம் ஒன்றை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திற்கு அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதத்தின் பிரதி இந்த வழக்கில் வழக்காளியால் ஓர். ஆவணமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆக, சிறிதரன் எம்.பி. கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதம், இந்த வழக்காளிக்கு நீதிமன்றத்தில் ஓர் ஆவணமாகச் சமர்ப்பிக்கக் கூடிய விதத்தில் கிடைத்திருக்கின்றது.

அடுத்தது தமிழரசு கட்சியின் முன்னைய தலைவர் அமரர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் ஒரு சத்தியக் கடுதாசியை மனுதாரருக்கு ஆதாரவாகச் சமர்ப்பித்துள்ளார். அதிலே, அவர், கட்சியின் மத்திய குழுக் கூட்டங்கள் ஒழுங்காக கூட்டப்படவில்லை என்று குறை கூறும் விதத்தில் நீதிமன்றத்திற்குக் கருத்து தெரிவித்திருக்கிறார். உண்மையில் அந்த சத்தியக் கடுதாசியை மன்றுக்கு சமர்ப்பித்த கலையமுதன் தன்னுடைய தந்தையார் மாவை சேனாதிராஜா அதே கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, நீண்ட பல வருடங்களாக கட்சியின் தேசிய மாநாட்டையே நடத்தாமல் இழுத்தடித்து, தான் தலைமைப் பதவியில் தொடர்ந்தமைதான் தமிழரசுக் கட்சியை இந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதை மறந்து, தமது தந்தையின் செயல் திறனின்மையைக் கவனிக்காமல் விட்டு விட்டு, இப்போது மத்தியக் குழு கூட்டத்தை கட்சி நிர்வாகம் சரியாக கூட்டவில்லை என்று புறணி பாடத் தொடங்கி இருக்கிறார். தமது தந்தையார் கட்சியின் தேசிய மாநாட்டையே நடத்தாமல் இழுத்தடித்த சமயம் அதற்கு எதிராகக் குரல் கொடுத்து, அந்த மாநாட்டை நடத்த செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்த கலையமுதன், இப்போது கட்சி சுறுசுறுப்பாக இயங்கும் சமயத்தில், மத்திய குழுவை கூட்டவில்லை, அரசியல் குழுவை கூட்டவில்லை என்று கதை விடுவது சுத்த அபத்தமாகும்.

---

## மாநகர சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினருக்கு மாநகர மேயரால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் ஜூலை மாத அமர்வு மாநகர மேயர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்றுக் காலை மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

மாநகர சபை உறுப்பினர்களிடையே விவாதம் நடைபெற்ற நிலையில், சபை அமர்வில் பங்கேற்ற மாநகர சபை உறுப்பினர் இரத்தினம் சதீஸ் வெளியே சென்று பார்வையாளர் பகுதியில் இருந்து மாநகர சபை அமர்வை முகநூல் ஊடாக நேரலையில் ஒளிபரப்பினார்.

இதனை அவதானித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாநகர சபை உறுப்பினர் ப.தர்சானந் குறித்த விடயம் தொடர்பில் மாநகர மேயரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

சபை ஒழுங்கு விதிகளுக்கு மாறாக இந்த உறுப்பினர் செயற்பட்டமையால் அவருக்கு ஒரு மாதம் சபை அமர்வில் பங்கேற்கத் தடை விதிப்பது சம்பந்தமாகமேயர்சபைஉறுப்பினர்களின்ஆலோசனையை கேட்டார்.

திடீரென எழுந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் இளங்கோவன், மேற்படி உறுப்பினர் புதிய உறுப்பினர் என்பதால் மன்னிப்பு வழங்குமாறு கோரினார். இதையடுத்து ஏனைய கட்சிகளைச் சேர்ந்த சிலர் அந்த உறுப்பினரிடம் தன்னிலை விளக்கம் கோருமாறு கோரினர்.

இதையடுத்துச் சபைக்குள் சென்ற சம்பந்தப்பட்ட உறுப்பினர் தான் ஊடகவியலாளர் எனக் கூறியதுடன் அடையாள அட்டை என்று ஒரு அட்டையையும் காண்பித்து, அதனால்தான் சபை அமர்வை நேரலை செய்தேன் என்று கூறினார்.

ஊடகவியலாளர்கள் இருக்கும்போது உறுப்பினர் அவ்வாறு செயற்பட்டமை தொடர்பாகக் கடும் எச்சரிக்கை விடுத்த மாநகர மேயர், இனிமேல் இவ்வாறு சபை அமர்வில் நடந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

மாநகர சபை உறுப்பினர் இரத்தினம் சதீஸ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பிரிவு உறுப்பினர் ஆவார். அத்துடன் முகநூல் வாயிலாக நேரலை ஒளிபரப்புபவர். இம்முறை தேர்தலில் யாழ். மாநகர சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## என் திட்டத்தை...

(முதலாம் பக்ககத் தொடர்ச்சி...)

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் படைக்கப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையறுகையில்,

"முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஐக்கிய தேசியக் கட்சி பற்றியே அதிகளவில் நூல்களை வெளியிட்டுள்ளார். அதுவும் நன்மைக்கே. ஏனெனில் 75 ஆண்டுகால அரசுகளை விமர்சிப்பவர்கள் இனியேனும் இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இறப்பர் – அரிசி ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வெளிப்படுத்துகின்றது. 1953ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாட்டைத் தொடந்தே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சீனாவுடன் முதலாவதாக வர்த்தக ரீதியிலான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்தே இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு பலமடைந்தது.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார். குறுகிய காலத்தில் பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை அமுல்படுத்தியுள்ளேன். இந்தத் திட்டங்களை சிறந்த முறையில் அநுர அரசு செயற்படுத்தினால் நிலையான முன்னேற்றத்தை அடைய முடியும். அரசியல் பிரபல்யத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை மாற்றியமைத்தால் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும்." – என்றார்.

---

## நீண்ட நேரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்ட மூன்று குழுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சபையின் அனுமதிக்காகச் சமர்பிக்கப்பட்டன.

இதன்போது உறுப்பினர்கள் நீண்ட விவாதங்களில் ஈடுபட்டமையால் சபை அமர்வுகள் நீண்ட நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

குறிப்பாக மாநகர சபை அமர்வுகளுக்குத் தேவையான பணியாளர்களை நியமிப்பது தொடர்பிலும், வட்டாரங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும், நல்லூர் உற்சவ காலத்தில் அமைக்கப்படும் வீதித் தடைகள் தொடர்பிலும் நீண்ட நேர விவாதங்கள் நடைபெற்றன.

மேலும் சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பிலும் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றமையால் சபை அமர்வுகள் இரவு 7 மணி வரை இடம்பெற்றன.

வெறுமனே 25 உறுப்பினர்கள் மாத்திரமே சபை அமர்வுகளில் இறுதி வரை கலந்துகொண்டமையால் பெரும்பாலான இருக்கைகள் வெறுமையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழா

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழாவானது கடந்த திங்கட்கிழமை துர்த்தி திதியும் அவிட்ட நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையான பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மாலை பூசை வழிபாடுகளை தொடர்ந்து இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று நாகதம்பிரான் பிள்ளையார், முருகனுடன் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி உலா இடம்பெற்றிருந்தது.









# இந்த வருடம் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்குத் திட்டம்

இந்த வருடம் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்தது.

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளை நாட்டிற்குள் கொண்டுவருமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளதாக இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

தற்போதுள்ள பொருளாதார சூழ்நிலையில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை அடையுமென அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் பின்பற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் காரணமாக பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜ/ன ஹேரத் தெரிவித்தார்.



இலங்கை முதலீட்டு சபை 79 திட்டங்களைப் பெற்றுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதில் 40 புதிய திட்டங்களும் தற்போதுள்ள வணிகங்களை விரிவுபடுத்துவதற்கான 39 திட்டங்களும் அடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி முதலீடுகளின் பெறுமதி 4,669 மில்லியன் ஆகும்.

# அபிவிருத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்துமாறு அறிவுறுத்தல்



அபிவிருத்தி திட்டங்களை விரைவாக செயற்படுத்துமாறு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 23,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் அபிவிருத்தி பணிகளுக்காக 53,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் அபிவிருத்தி திட்டங்களுக்கு குறித்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என பிரதியமைச்சர் தெரிவித்தார்.

சில உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தாமதமாகியுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

அவ்வாறாயின் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மீண்டும் திறைசேரிக்கு திருப்பியனுப்ப நேரிடும் என பிரதியமைச்சர் ருவன் செனரத் தெரிவித்தார்.

# மேலதிக ஆசிரியர்கள் தொடர்பான தரவுகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்கும் கிராமப்புற பாடசாலைகளில் அதிகளவிலான ஆசிரியர்கள் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும் என கல்வி பிரதியமைச்சர், மதுர செனவிரத்ன தெரிவித்தார்.



# வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கு சிகிச்சை, ஆலோசனை

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கும் வகையில் மாதம் தோறும் கிளினிக் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் மாதத்தில் ஒரு தடவை வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதந்து உரிய சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

இதையடுத்து, எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை இம்மாதத்திற்கான கிளினிக் இடம்பெற உள்ளதாகவும் அதில் பங்கேற்று சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை பெறவிரும்புபவர்கள் வைத்தியசாலை குடும்ப நல உத்தியோகத்தருடன் (சாந்தரூபி தொலைபேசி இலக்கம் - 0779217767) தொடர்பு கொண்டு தங்களின் பெயர் விபரங்களை பதிவு செய்துகொள்ளுமாறு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி விடுத்துள்ள அறிவிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேச்சுப் பல்லக்கு

‘பேச்சுப்பல்லக்கு, தம்பிகால்நடை!’ என்பார்கள். பேசிக்கொண்டே காரியங்களைச் செய்யாமல் இருப்பதை அல்லது செயலளவில் ஈடுபடாமல் பேசிக் கொண்டிருப்பதை இப்படி நையாண்டியாகக் கூறுவார்கள்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் விவகாரம் தொடர்பாக அரசாங்க மட்டத்தில் இப்போது அடிக்கடி பேசப்படும் விடயங்களை - அவ்வப்போது அவிழ்த்து விடப்படும் கதைகளை - நோக்குகின்ற போது இந்த சொலவடைதான் நினைவுக்கு வருகின்றது.

இந்தக் குண்டு தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. நாலாவது ஜனாதிபதி பதவிக்கு வந்து ஒரு வருடம் ஆகுகின்றது. மூன்றாவது அரசும் பதவியேற்று ஒரு வருடம் கடக்கும் நிலைமை. ஆனால் இந்த விவகாரத்தை ஒட்டிய விசாரணை விடயத்தில் வெறும் வாய்ச் சவடால் அறிவிப்புகள்தான் வந்து கொண்டிருக்கின்றனவே தவிர, விடயம் நகர்ந்ததாக தெரியவில்லை. தாக்குதல் சூத்திரதாரிகள் மடக்கப்பட்டனர் என்றோ அவர்கள் இன்னார்தான் என்றோ வெளிப்படையாக மக்கள் நம்பத் தகுந்த தகவல்கள் எதுவும் இன்னும் வரவில்லை. ஆயினும் பேச்சுப் பல்லக்குத் தொடர்கின்றது.

அந்த வகையில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தன் பங்குக்கு இப்போது - நேற்று முன்தினம் - அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

‘இந்தத் தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை காலமும் வெளியாகாத பல விடயங்கள் தற்போதைய விசாரணைகளின் ஊடாக வெளிவந்துள்ளன. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பலர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள். விசாரணைகளின் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

“உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் விவகாரம் மற்றும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயத்தில் கூறப்பட்ட பெயர் மற்றும் தொடர்புடைய நபர்கள் விசாரணைகளின் அடிப்படையில் எதிர்வரும் நாள்களில் கைது செய்யப்படுவார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள். குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை. பல விடயங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. விசாரணைகள் சிறந்த முறையில் இடம் பெறுகின்றமையால்தான் பல விடயங்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகள் நிறைவுபடுத்தப்பட்டு வெகுவிரைவில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.” - என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

நடந்தால் நல்லது. ஆனால், நடக்குமா என்பதுதான் கேள்வி.




# வன்னி உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் இந்தியத் துணைத் தூதுவருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளியை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரன், வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் பாலகிருஷ்ணன் பாலேந்திரன், வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் திருநாவுக்கரசு கிருஷ்ணவேணி, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையின் உபதவிசாளர் தேவசகாயம் சிவானந்தராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இந்தியாவின் ஒத்துழைப்புடன் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாராட்டும் நன்றியும் தெரிவித்தமையுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய மேலும் பல விடயங்கள் தொடர்பில் தனது ஆலோசனை மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஆர்வத்துடன் செவிமடுத்த இந்திய துணைத் தூதுவர், அவை தொடர்பில் எதிர்காலத்தில் நிச்சயம் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு நேரடியாக விஜயம் செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். அதன் பிரகாரம் அந்த உள்ளூராட்சி சபைகளுக்கு நேரடியாக விஜயம் செய்வார் என இந்தியத் துணைத்தூதுவர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் விசேட தேவைப்பாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள், காணி ஆக்கிரமிப்பு, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் பற்றி தவிசாளர்களினால் விரிவாக இந்திய துணைத்தூதுவருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டிற்கும், வடக்கு மாகாண மக்களின் வளமான வாழ்விற்கும் அயல் நாடு என்கின்ற வகையில் எதிர்காலத்திலும் இந்தியாவின் பங்களிப்பு நிச்சயமாக தொடர்ந்து இருக்கும் என இதன்போது இந்திய துணைத்தூதுவர் குறிப்பிட்டார்.








# யாழ்ப்பாணத் திரைப்பட கழகத்தின் திரைப்பட விழா இன்று தொடக்கம்

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம், தனது முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடத்துகின்ற திரைப்பட விழா இன்று 17ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஐந்து நாள்களுக்கு யாழ்ப்பாணத் தில் நடைபெறவுள்ளது .

இல.18ஃ2,அம்மன் வீதி,யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள “எங்கட புத்த கங்கள்“ இல்லத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவில் ஜப்பான், வியட்நாம், செனகல், துருக்கி, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் முழுநீளத் திரைப்படங்கள் ஆறும், ஆவணப்படமொன்றும் ஆங்கி லத் துணைத்தலைப்புக்களுடன் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

இன்று வியாழன், நாளை வெள்ளி ஆகிய நாள்களில் மாலை 5.00 மணிக் கும், சனி, ஞாயிறு நாள்களில் மு. ப. 10.00, மாலை 4. 30 மணிக்கும், திங் கட்கிழமை மாலை 4.30 மணிக்கும் காட்சிகள் நடைபெறும்.

இலவசக் காட்சிகளாக நடைபெறவுள்ள இந்த திரைப்பட விழா, 1979 – 1981 வரை செயற்பட்ட முன்னோடிக் கழகமான ‘யாழ்ப்பாணத் திரைப்பட வட்ட’த்தின் தலைவர், மறைந்த ஏ.ஜே.கனகரத்தினா, உலகத் திரைப்படங்கள் பற்றிய எழுத்து களின் முன்னோடியான மறைந்த கே.எஸ்.சிவகுமாரன் ஆகிய மூத்த செயற் பாட்டாளர்கள் இருவருக்கும் சமர்ப்பணம் செய்யப்படவுள்ளது.

வரையறுக்கப்பட்ட இருக்கைகளே உள்ளதால், முதலில் வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும், காட்சி தொடங்குவதற்குப் பத்து நிமி டங்களுக்கு முன்பு பார்வையாளர் களை இருக்கைகளில் அமருமாறும் யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் வேண்டு கோள் விடுத்துள்ளது. நமது பிரதேசத் தில் நல்ல திரைப்பட இரசனையைப் பரவலாக்கும் இம்முயற்சியில் திரைப் பட ஆர்வலர்களை இணைந்துகொள்ளு மாறும் அது அழைப்பு விடுத்துள் ளது.

# மன்னாரில் மக்களினுடைய அடிப்படை உரிமைகளை பாதுகாக்க பாரிய போராட்டத்தை முன்னெடுப்போம்!

## பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் அறிவிப்பு




(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்கள் தமது வளங்களையும், உரிமை களையும் பாதுகாப்பதற்கு பாரிய போராட் டத்தை முன்னெடுப்பதற்கு முன் மக்கள் கேட்கின்ற அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் அரசு தலையிட் டுத் தீர்வு காண வேண்டும். இல்லையேல் அரசுக்கு எதிராக மிகப்பெரிய போராட் டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மக்காஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழு அலுவல கத்தில் நேற்றுப் புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – எமது வளங்களை அபகரிக்கும் நோக்கத்துடன், கனிய மணல் அகழ்வு தொடர்பாக பல நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏற்கனவே மன்னாரில் நிறுவப்பட்ட 30 காற்றாலைகளை தொடர்ந்து மேலும் 05 காற்றாலைகள் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பல நிறுவனங்கள் இலங்கை மின்சார சபையின் அனுசரணையுடன் முன்னெடுத்து வருகின்றன.

அச்செயல் மன்னார் தீவு மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே அவர்களுக்கு நாங்கள் மேலும் ஒரு வார கால அவகாசத்தை வழங்குகின்றோம். இந்த வேலைத்திட் டத்தை உடனடியாக நிறுத்தி, வேறு இடத்திற்கு காற்றாலை திட்டத்தை மாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம். நிலங்களை பாதுகாக்கும் உரிமை வாழிடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு உள்ளது.

அது அவர்களின் பிறப்புரிமை. அந்த நிலங்களை உங்களால் ஒருபோதும் பறித்து எடுக்க முடியாது.

எனவே இத்திட்டத்தை நிறுத்தா விட்டால் – நாங்கள் அத்திட்டத்தை நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டால் – உங்க ளுக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற் படும். எனவே உங்களை பாதுகாத்துக் கொள்ள மேலதிகமாக அமைக்கப்பட்டு வரும் 5 காற்றாலை திட்டத்தை உடன டியாக நிறுத்தி மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். – என அவர் தெரிவித்தார்.

மேலும் பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்த ஊடக சந்திப்பில் அவர் கருத்துத் தெரிவித்தார்.





# தமிழர்களது பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்று ஆடிப்பிறப்பு...!

**(இன்று (17) ஆடிப்பிறப்பு ஆகும். ஆடிப்பிறப்பு என்று கூறியதும் நினைவுக்கு வருவது ஆடிக்கூழும், கொழுக்கட்டையும்தான்.)**

ஆடிப்பிறப்பு என்ற பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத் தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண்டாடி வருகின்றனர். இன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும்தான் சிறப்பு உணவுகள். இந்த உணவுகள்தான் ஆடிப்பிறப்பு பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள்.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர்களுக்கு இராப் பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. வானியல், அறிவியல் பின்புலத்தை கொண்ட இந்தப் பண்டிகை இயற்கைசார்ந்த வழிபாடாகவும் பரிமாணம் பெறுகிறது.

தமிழகத்தில், இந்த நாளில் விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தலும் உற்றார், உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணலும் வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆடி மாதத்தில் ஆற்றுநீர் வளமுள்ள தென்னாட்டு மக்கள் காவிரி போன்ற ஆற்றங்கரைகளில் சித்திரான்னம் உண்டு படகோட்டம் போன்ற கேளிக்கைகளில் பங்குபற்றும் இந்த நாளை 'ஆடிப்பெருக்கு' என்றும் ஆடி 18 என்றும் அழைத்து பண்டிகையாகக் கொண்டாடுவர்கள். தற்காலத்திலும் தமிழகத் தலைநகர் சென்னையில் ஆடிப்பெருக்கு கொண்டாடும் வழக்கம் இருக்கிறது.

**ஆடி விதை தேடி விதை**
**ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்**
**ஆடி ஆவணி ஆன புரட்டாதி**
**காடி தோய்த்த கனபனங் காயத்தைத்**
**தேடித் தேடித் தினமும் புசிப்பவர்**
**ஓடி யோடி யுலகெலாம் பீச்சுவர்**

இப்படி தமிழக பழைய பாடல்களில் எழுதப்பட்டுள்ளமை தமிழகத்தில் ஆடிப்பிறப்பிற்குள்ள முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடசாலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். ஆடிப்பிறப்புக்கு ஒரு காலத்தில் விடுமுறைகள் விடுக்கப்பட்டுள்ளன. அந்தளவு முக்கியமான நாளாக ஆடிப்பிறப்புஅமைந்துள்ளது. அதாவது தை முதல் நாளையும் ஆடி முதல் நாளையும் ஈழத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஒரு ஆண்டின் தொடக்கத்தையும் அரை ஆண்டின் தொடக்கத்தையும் கொண்டாடுகின்றனர். இங்கு முதல் அரையாண்டு தேவர்களுக்குரியதென்றும் இறுதி அரையாண்டு பிதிரகளுக்கு உரியது என்றும் ஒரு ஐதீகம் இருக்கிறது.

கற்கடகம் என்பது ஆடி மாதத்தின் பழைய தமிழ் பெயராகும். ஆடி முதல் நாளை தமிழர்கள் வரவேற்கும் விழாவே ஆடிப்பிறப்பு. இப் பண்டிகையின் போது தேங்காய் சுடுதல் என்ற உணவுப் பழக்கமும் தமிழர்களிடம் காலம் காலமாக நிலவிவந்துள்ளது.

தேங்காய் நாரை முற்றிலும் உரித்துவிட்டு நன்றாக உருட்டியபின், இ தேங்காயின் 3 முகங்களில் ஒன்றில் மட்டும் துளையிட்டு தேங்காய் நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்து கொள்ளவும். சிறு பருப்புடன், பொட்டுக்கடலை, எள்ளு,



வெல்லம், சிறிதளவு உப்பிட்டு அரைத்தெடுத்து. தேங்காயின் ஒரு துவாரத்தின் வழியாக அடைத்து சிறிது தேங்காய் நீரை ஊற்றியபின் இதுவாரத்தை மஞ்சளிட்டு அடைத்து வாதனங் குச்சியை துவாரத்தில் சொருகி தேங்காயை தீயில் சுட்டபின் கடவுளுக்கு படைத்தபின் உடைத்து குடும்பத்துடன் சாப்பிடும் வழக்கம் தமிழ்நாட்டில் காணப்பட்டுள்ளது.

ஆடிப்பிறப்பன்று, வானவேடிக்கைகள், களியாட்ட நிகழ்வுகள், பட்டம் விடுதல் முதலிய நிகழ்வுகளில் ஈழத்தவர்கள் ஈடுபட்டதாக மூதாதையர்களின் நினைவுக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படுகிறது. சிறுவர்களும் முதியவர்களும் இணைந்து கூடிக் கொண்டாடி மகிழும் ஒரு நிகழ்வாக ஆடிப்பிறப்புக் காணப்படுகிறது. நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடல் ஆடிப் பிறப்பின் கொண்டாட்டம், களியாட்டம், பண்பாட்டு முக்கியத்துவம், கலாசார செழிப்பு என்று பல்வேறுமுக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகிறது.

தொடர்ச்சி▼

# தமிழர்களது பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்று ஆடிப்பிறப்பு...!

தொடர்ச்சி▲

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூழப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாஇலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் பாடிப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூழப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!



- நாவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

இப்போது ஆடிப்பிறப்புக்கு விடுமுறை இல்லை. ஆடிப்பிறப்பு என்று மாத்திரம் வெறுமனே எமது நாள்காட்டிகள் நினைவுபடுத்துகின்றன. இப்போது விடுமுறையற்ற ஆடிப் பிறப்பு மாத்திரம் வருவதில்லை. விடுதலையற்ற ஆடிப்பிறப்புத்தான் வருகிறது. விடுதலை பெறாத இனத்தின் எல்லாப் பண்டிகைகளும் கொண்டாடும் தன்மையை இழக்கின்றன. அத்துடன் கூடியிருந்தவர்களை இழந்து, கூடியிருந்தவர்களுக்காக காத்திருக்கும் துயரச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ள ஈழத்தில் இந்த ஆடிப்பிறப்பு வேதனையை தோற்றுவிக்கும் நாளாகவும் ஆகிவிட்டது.

ஆடிப்பிறப்புக்கு விடுமுறை வழங்கப்பட்ட செயற்பாடு ஏன் வழக்கொழிந்தது? தற்போது ஆடிப்பிறப்பின் போது கொண்டாட்ட நிகழ்வுகளை பாடசாலைகளிலும், பொதுஇடங்களிலும் வடமாகாண பண்பாட்டு திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. எனினும் ஆடிப்பிறப்பு போன்ற பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க தினங்களை விடுமுறை தினங்களாக்க வேண்டும். வடக்குக் கிழக்கில் இந்த நடைமுறையைக் கொண்டுவருவதன் மூலம் காயப்பட்ட ஈழ மக்கள், தமது பாரம்பரிய பண்பாட்டு தினங்களைக் கொண்டாடி உளத்தை மகிழ்ச்சிக்கு உள்ளாக்க முடியும்.




# ஆடிப் பிறப்பு அனைவர்க்கும் மகிழ்வே!

ஆடி என்பது அமங்கல அல்ல
ஆன்மீக கருக்கள் நிறைந்த நல்மாதம்
பீடை என்பது பொருந்தாக் கருத்தே
பீடுடை என்பதே சிறப்புடைச் சிந்தனை

அமங்கலம் என்பது ஆடியாய் ஆகுமா
அம்மனின் மாதம் ஆடியே ஆகும்
படையலும் பாட்டும் பரவசம் அனைத்தும்
பக்தியாய் மலரும் பாங்குடை மாதமே

ஆடியில் செவ்வாய் ஆடியின் வெள்ளி
ஆடியின் பூரம் ஆடியின் கார்த்திகை
ஆடித்தபசு ஆடியமாவாசை ஆடிப் பௌர்ணமி
ஆடியில் ஆண்டவன் நினைப்பதை உணர்த்தும்



ஆடியில் ஆறுகள் நீரைப் பெருக்கும்
ஆடிப் பெருக்கென அனைவரும் குவிவார்
அம்மனை எண்ணி உருகியே நின்று
ஆடிப் பாடி படைத்துமே மகிழ்வார்

அமாவாசை மாதங்கள் அனைத்திலும் உண்டு
ஆடியில் மட்டும் அதன் நிலை சிறப்பே
பிதிர்க்கடன் தீர்த்திட பொருத்தமாய் அமையும்
ஆடியின் அமாவாசை என்பதே சிறப்பு

இறையை உறவாய் ஆக்கிடும் பாங்கை
உலகிடை சைவமே அணைத்துமே நின்றது
அம்மனை உறவாய் கண்டநம் அடியவர்
அம்மனும் ருதுவாய் ஆகினார் என்றனர்

ஆடியின் பூரம் ஆனந்தத் திருவிழா
ஆடியே உமையின் அவதாரம் ஆகும்
அம்மனே ஆண்டாளாய் வந்ததும் ஆடியே
அரங்கனை ஆண்டாள் அணைந்ததும் ஆடியே

அம்மனை எண்ணிடும் அகநிறை மாதம்
ஆடிக் கூழினைக் காய்ச்சிடும் மாதம்
அம்மனின் கோவிலில் கூழைப் படைத்து
அம்மனை ஏற்றியே போற்றிடும் மாதம்

கூழொடு கொழுக்கட்டை சேர்த்துமே செய்து
யாவரும் படைத்துமே பாடியே மகிழ்வார்
வீடுகள் தோறும் கூழது வாசம்
ஆடியை ஆனந்தம் ஆக்கியே நிற்கும்

ஆடிப் பிறப்பு அனைவர்க்கும் மகிழ்வே
கூழ்ப் பனங்கட்டி கூழுமே குடிக்கலாம்
ஆடியை ஒதுக்குதல் அறிவுடை ஆகா
ஆடியும் அருமையாய் அமைந்த நல்மாதமே!



மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக்
கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன்,
ஆஸ்திரேலியா.



# மஸ்கெலியா நகரில் நடைபாதைகளை ஆக்கிரமித்திருந்த கடைகள் அகற்றல்!

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா நகரில் உள்ள அனைத்து நடைபாதைகளையும் ஆக்கிரமித்துள்ள நடைபாதை வியாபாரிகளை அகற்றி, அந்த நடைபாதைகளை பாதசாரிகளின் பாவனைக்ந்த் திறந்து விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளரும் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் நேற்று மஸ்கெலியா நகரில் முன்னின்று மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை முதல் பஸ் நிலைய வீதி, தபால் கந்தோர் வீதி, 7 ஆம் வீதி, பிரதான வீதி, 2 ஆம் வீதி ஆகியவற்றில் மக்கள் நடமாடும் வீதியோரங்களை ஆக்கிரமித்திருந்த வர்த்தக நிலையங்கள் அகற்றப்பட்டு மக்கள் நடமாடும் வகையில் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு சில வர்த்தக நிலையங்களுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நகரில் உள்ள பல பிரச்சினைகள் கேட்டு அறியபட்டு அதற்கான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கபடும் என பிரதேச சபைத் தவிசாளர் க.இராஜ்குமார் தெரிவித்தார்.

இந்தச் செயற்பாட்டில் மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர் மற்றும் அலுவலக மேற்பார்வையாளர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி, பொது சுகாதார அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கைதடியில் நிலத்தடி நீருக்குப் பெரும் ஆபத்து ஆராயக் கோருகிறார் பிரதேசசபை உறுப்பினர்

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கைதடியில் இருந்து காரைநகர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு தினமும் அதிகளவான நீரை எடுத்துச் செல்வதனால் கைதடியின் நிலத்தடி நீருக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் செ.ஜயபாலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரிப் பிரதேச சபையில் இடம்பெற்ற கன்னி அமர்வின் போதே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –



கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து காரைநகரில் உள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு தினமும் முப்பதாயிரம் லீட்டர் நீர் பவுசர் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது.

உரிய அனுமதி பெறப்பட்டே எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் பிரதேசசபை அது தொடர்பாக ஆராய வேண்டும். ஒரு நாளைக்கு எவ்வளவு நீரை எடுக்க முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

தொடர்ந்து அதிகளவான நீரை எடுத்துச் செல்வதன் மூலம் கைதடியில் உள்ள கிணற்று நீர் உவர் நீராக மாற்றமடையும் அபாயமுள்ளது. அத்துடன் மேற்படி கிணற்றுக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து கைதடி மற்றும் நாவற்குழி பகுதிகளில் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

இதனால் மேற்படி குடி தண்ணீர் விநியோகமும் எதிர்காலத்தில் பாதிப்படையக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது. – என்றார்.



# மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று மாலை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கின் நெறியாள்கையில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள், நிறை குறைகள் எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், மூதூர் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், முப்படையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினர் கையகப்படுத்திய காணிகள் தொடர்பில் விரைவில் தீர்வு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் வர்த்தமானிகளின் மூலம் வனவளத் திணைக்களம் கையகப்படுத்திய காணிகளை புதிய வர்த்தமானி மூலம் விடுவித்து மக்களின் பிரச்சினையைத் திர்க்க இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. .

மட்டக்களப்பு மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுஜ் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், இளையதம்பி ஸ்ரீநாத், கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், கந்தசாமி பிரபு, ஆகியோரது பங்கேற்புடன் இக் கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் விஷேட அதிதியாக, சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக்க பட்டபெந்தி கலந்துகொண்டார்.

இதன்போது, சுற்றாடல் அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இன்றைய கூட்டத்தின் போது இரா. சாணக்கியன் எம்.பி. பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தார்.

“வனத்திணைக்களத்தின் 1985ம் ஆண்டு வர்த்தமானியில் காடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்து, எமது மக்கள் பயிர்ச் செய்கை செய்து வந்த பல ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியிருந்தது. இதனை கருத்திற்கொண்டு முன்னைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணிகளை விட, பின்னர் வந்த வர்த்தமானிகளின் மூலம் கையகப்படுத்திய காணிகளை விடுவிக்குமாறு நான் முன்னைய அரசாங்க காலத்தில் - 2023ம் ஆண்டில் - கோரிக்கை விடுத்திருந்தேன். அப்போதைய வேண்டுகோளின் பிரகாரம், அனைத்து பிரதேச செயலகங்களினாலும் குறித்த வர்த்தமானிக்கு மேலதிகமாகக் காடுகளாகக் காட்டப்பட்டுள்ள நிலங்கள் தொடர்பாக அறிக்கை தயார்செய்து வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம் காணிகளை விடுப்பதற்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதனை ஒட்டி சுற்றாடல் அமைச்சர் புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக முன்னரும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டு நிறைவேறாமல் சென்றுள்ளது. ஆகவே இந்த அரசாங்கமாவது இக்காணிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறேன்.”- என்றார் சாணக்கியன்.

புவிச்சரிதவியல், சுரங்கங்கள் அளவைப் பணியகம் (GSMB) ஆனது மேல் மண் மற்றும் ஆற்றுமண் அகழ்வு பத்திரங்கள் வழங்கும் போது பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட திணைக்களங்களின் பிரசன்னத்துடன் களவிஜயம் மேற்கொண்டு அனைத்து திணைக்களங்களின் ஒப்புதலின் பின்னர்தான் அவற்றை வழங்க வேண்டும் எனவும் -

அத்துடன், மண் அகழ்ந்து சேமித்து வைக்கப்படும் களஞ்சியசாலை (Yard) மண்ணகழ்வுதாரர்கள் காட்டினை அண்டிய பகுதியில் வைத்து இரவு வேளைகளில் மண்ணகழ்வினை மேற்கொண்டு பகல் வேளைகளில் அதனை விநியோகம் செய்கின்றார்கள். ஆகவே இதனை பிரதான வீதிகளுக்கு அருகாமையில் உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்யக்கூடியவாறு அமைத்தல் வேண்டும். அத்துடன், இந்நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ளுவதற்கு வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு தேவையான ஆளணி மற்றும் வாகன வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் எனவும் - சாணக்கியன் எம்.பி. அங்கு தனது கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.











# பாதெனிய அவுலேகம பிரதேசத்தில் மூன்று வாகனங்கள் மோதி விபத்து

**(உடப்பு க.மகாதேவன்)**

குருநாகல் – புத்தளம் வீதியில் பாதெனிய அவுலேகம பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் கார், சிறிய ரக லொறி ஆகியவைகள் விபத்துக்குள்ளாகின.

இதில் காயமடைந்த ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

காரின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கம் காரணமாக அருகிலுள்ள மரம் ஒன்றின் மீது கார் மோதியதுடன் தொடர்ந்து மூன்று வாகனங்களும் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

ජාතික නිවාස සංවර්ධන අධිකාරිය
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
National Housing Development Authority

கட்டுமானப் பணிகள் தடைப்பட்டுள்ள 08 வீடமைப்பு திட்டங்களின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

நாரஹேன்பிட்டி மற்றும் டொரிங்டன் பகுதிகளில் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதுடன் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 2 வீடமைப்பு திட்டங்களின் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த 2 வீடமைப்பு திட்டங்களூடாக 750 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதனை தவிர நடுத்தர வருமானம் ஈட்டுவோரை இலக்காகக் கொண்டு பேலியகொடை பகுதியில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே நிறுத்தப்பட்ட 2 தொடர்மாடி குடியிருப்பு திட்டங்கள் ஒருகொடவத்தை பகுதியில் 2 வீடமைப்பு திட்டங்கள் மற்றும் ஸ்டேடியம் கம வீடமைப்பு திட்டம் ஆகியவற்றை மீள ஆரம்பிப்பதற்காக புதிய முதலீட்டாளர்களை கண்டறிந்துள்ளதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அனுராதபுரம் நகரில் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்காக நிர்மாணிக்கப்படவிருந்த தொடர்மாடிக் குடியிருப்பு திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

அந்த கட்டுமானப் பணிகளையும் விரைவில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# எம்.பியாகும் கமலை வாழ்த்திய ரஜினி!



மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்க உள்ள ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனுக்கு நடிகர் ரஜினிகாந்த் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன், நடிகர் ரஜினி காந்தை அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் நேற்று சந்தித்தார். அப் போது, மாநிலங்களவை உறுப்பினராக எதிர்வரும் 25 ஆம் திகதி பதவியேற்க இருப்பது தொடர்பான ஆவணத்தைக் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“மாநிலங்களவை உறுப்பினராகப் பதவியேற்கவிருக்கும் என்னுடைய அருமை நண்பர் கமல்ஹாசனுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.” என தெரி வித்துள்ளார்.

முன்னதாக, ரஜினிகாந்த் உடனான சந்திப்பு குறித்து கமல்ஹாசன் தனது எக்ஸ் பதிவில், “புதிய பயணத்தை நண்பர் ரஜினிகாந்த் உடன் பகிர்ந்தேன். மகிழ்ந் தேன்.” என்று குறிப்பிட்டிருந்தார்.



### 1,198 நாள்கள் போராடிய

# விவசாயிகளிடம் பணிந்தது அரசு!

## கர்நாடகாவில் 1,777 ஏக்கர் நில அபகரிப்பு கைவிடல்!

பெங்களூர் அருகே 1777 ஏக்கர் விவசாய நிலத்தை விண்வெளி பூங்கா வுக்காக கையகப்படுத்தும் முடிவை கைவிடுவதாக கர்நாடக முதல்வர் சித்த ராமையா அறிவித்துள்ளார்.

இதனை எதிர்த்து 1198 நாள்கள் தொடர்ந்து போராடிய விவசாயிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளதாக போராட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரை அடுத்துள்ள தேவனஹள்ளியில் விண் வெளி பூங்கா அமைக்கப்படும் என அம்மாநில அரசு கடந்த 2024 ஆம் ஆண்டு அறிவித்தது.

இதற்காக தேவனஹள்ளியை சுற்றியுள்ள 13 கிராமங்களில் 1,777 ஏக்கர் விவசாய நிலத்தை கையகப் படுத்துவதாக அறிவித்தது.

இதற்காக விவசாயிகளுக்கு அதிக இழப்பீடு, வேலை வாய்ப்பு, மாற்று நிலம் ஆகியவற்றை வழங்குவதாக தெரிவித்தது.

இதனை எதிர்த்து விவசாய சங்க கூட்டமைப்பினர் 1198 நாள்களாக உண்ணாவிரதம், சாலை மறியல், பேரணி என தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

கடந்த 12 ஆம் திகதி பெங்களூரில் முதல்வர் சித்தராமையாவை சந்தித்து நிலம் கையகப்படுத்தும் முடிவை கைவிட வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்நிலையில் முதல்வர் சித்த ராமையா பெங்களூரில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் கருத்து தெரி விக்கையில்,

“விவசாய சங்க பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்று, விண்வெளி பூங்கா அமைப்பதற்காக 1777 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தும் முடிவை அரசு கைவிடுகிறது.

அதற்கான அனைத்து செயல்பாடு களையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறோம். அதேவேளையில் சில விவசாயிகள் தங்களின் நிலத்தை தாமாக முன்வந்து வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளனர். அந்த நிலங்களை கையகப்படுத்தி, அதனை தொழில் வளர்ச்சிக்கு அரசு பயன்படுத்தும்.” என்றார்.

# ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வேண்டும்: பிரதமர் மோடிக்கு ராகுல், கார்கே கடிதம் எழுதினர்

ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந் தஸ்து வழங்கும் சட்டத்தை வரவிருக்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் கொண்டு வர வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு, ராகுல் காந்தியும், மல்லிகார்ஜுன கார்கேவும் கடிதம் எழுதியுள்ளனர்.

இது தொடர்பாக மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கேவும் இணைந்து பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று அம்மாநில மக்கள் தொடர்ந்து வலி யுறுத்தி வருகிறார்கள். அவர்களின் இந்த கோரிக்கை சட்டப்பூர்வமானது.



அதோடு, இது அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான அவர் களின் உறுதியைக் காட்டுகிறது.

கடந்த காலங்களில் யூனியன் பிரதே சங்களுக்கு மாநில அந்தஸ்து வழங் கப்பட்டது. ஆனால், முன் எப்போதும் இல்லாத வகையில் மாநிலமாக இருந்த ஜம்மு காஷ்மீர், யூனியன் பிரதேசமாக தரமிறக்கப்பட்டது. ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப் படும் என்ற அரசாங்கத்தின் நிலைப் பாட்டை நீங்கள் பலமுறை உறுதிப் படுத்தி இருக்கிறீர்கள்.

கடந்த மே 19, 2024 இல் புவ னேஸ்வரில் நீங்கள் அளித்த பேட்டியில், மாநில அந்தஸ்து மீண்டும் வழங்கப் படும் என்பது நாங்கள் அளித்த வாக்கு றுதி. நாங்கள் அதை நிச்சயம் நிறை வேற்றுவோம் என கூறி இருந்தீர்கள். அதோடு, செப்டம்பர் 19, 2024 இல் ஸ்ரீநகரில் நடைபெற்ற பொதுக் கூட் டத்தில் உரையாற்றிய நீங்கள், ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என நாடாளுமன்றத்தில் நாங்கள் உறுதி அளித்திருக்கிறோம் என குறிப்பிட்டீர்கள். உச்ச நீதிமன்றத் திலும் மத்திய அரசு இத்தகைய உறுதி மொழியை அளித்துள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளனர்.

# காசாவில் இஸ்ரேல் தாக்குதல் 20 பேர் பலி; பலர் காயம்





காசா மீது நேற்று காலை முதல் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை காசாவில் உள்ள மருத்துவமனைகளில் பரிசோதிக்கப்படும் குழந்தைகளில் பத்தில் ஒரு குழந்தை கடுமையான ஊட்டச்சத்து பற்றாக் குறைக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலையும் பாலஸ்தீனப் பிரதேசங்களைச் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பதையும் எவ்வாறு நிறுத்துவது என்பது குறித்து விவாதிக்க 30 நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் பிரதிநிதிகளும் கொலம்பியாவின் தலைநகரான போகோட்டாவில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

# ஈரான் பயணத்தைத் தவிர்க்குமாறு இந்தியத் தூதரகம் அறிவுறுத்தல்

அத்தியாவசியமற்ற ஈரான் பயணத்தை தவிர்க்குமாறு அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் இந்தியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ஈரானுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதற்கு முன், கடந்த பல வாரங்களாக ஈரானில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அம்சங்களைக் கருத்தில் கொள்ளுமாறும், சூழ்நிலையை கவனமாக பரிசீலிக்குமாறும் இந்தியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.



ஈரானில் என்ன நடக்கிறது என்பதை தொடர்ந்து கண்காணிப்பதோடு, இந்திய அதிகாரிகள் வழங்கிய சமீபத்திய ஆலோசனைகளை பின்பற்றுமாறும் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஏற்கனவே ஈரானில் உள்ள இந்தியர்கள், இங்கிருந்து வெளியேற விரும்பினால் தற்போது கிடைக்கும் வணிக விமான சேவை மற்றும் கப்பல் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க முயல்வதாகவும், இது தங்கள் நாட்டின் எதிர்கால பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் கூறி அந்நாட்டுக்கு எதிராக இஸ்ரேல் கடந்த மாதம் வான் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் ஈரானின் அணு ஆயுத தயாரிப்புக்கான மூன்று மையங்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தியது.

# உக்ரைன் போரை 50 நாள்களில் நிறுத்தாவிடில் 100 சதவீத வரி!

## ரஷ்யாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



ரஷ்யா – உக்ரைன் இடையிலான போர் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரியில் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் இரு நாடுகள் இடையே போரை நிறுத்த சமரச முயற்சிகளை தொடங்கினார். எனினும் அவரது முயற்சி வெற்றி பெறவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அடுத்த 50 நாள்களுக்குள் உக்ரைனுடன் போர் நிறுத்தத்திற்கு புதின் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் ரஷ்யா மீது 100 வீதம் வரி விதிக்கப்படும் புதிடின் மீது நான் மிகவும் அதிருப்தியில் இருக்கிறேன். தான் சொல்லும் விஷயங்களை செய்யக்கூடிய நபராக அவரை நான் நினைக்கவில்லை. அவர் மிகவும் அழகாக பேசுவார்.

ஆனால் இரவில் மக்கள் மீது குண்டுகளை வீசுவார். ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனை ஆதரிக்கும் நேட்டோ படைகளுக்கு அமெரிக்கா பேட்ரியாட் ஏவுகணை அமைப்புகள் மற்றும் பேட்டரிகளை அனுப்பும்.” என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -17.07.2025




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதற்கு சாதகமான நாள். அது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். வளர்ச்சியை அளிக்கும். இன்றைய நாளை சிறந்ததாக ஆக்க புதிய வழிகளைக் காண்பீர்கள். உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்கவும்.

உங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இன்று அதிக பணிகள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

உங்களிடம் அகந்தைப் போக்கு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.இதன் மூலம் உறவு வலுப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பணப்பற்றாக் குறையை சந்திப்பீர்கள். இதனால் வருத்தமான மனநிலை காணப்படும்.

இன்று ஆற்றல் குறைந்து காணப்படுவதன் காரணமாக முதுகு வலியால் அவதிப்படுவீர்கள். சிறந்த ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை கையாள அனுசரணையான அணுகுமுறை தேவை. தன்னம்பிகை குறைந்து காணப்படும். அதனை உருவாக்கிக் கொள்ளும் வழி காண வேண்டும்.

கடினமான பணிகள் காணப்படும். அதனால் நேரம் செலவாகும். கவலையை உண்டாக்கும். பணியிடத்தில் சவாலான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படாது. ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதன் மூலம் இன்றைய நாளை இனிமையாக்கலாம்.

இன்று பண வரவு ஏற்படும் அதிர்ஷ்டம் காணப்படாது. பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும். உங்கள் உடன் பிறந்தோரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் திட்டங்களை செயலாற்ற நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள்.

பணியிடத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பல வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்யும் நிலையில் இருப்பீர்கள்.

நீங்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அதன் மூலம் நன்மை விளையும்.

இன்று பணியின் மூலம் பல சாதகமான பலன்கள் பெறுவீர்கள். கூடுதல் பண வரவு ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். அதனை நீங்கள் கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை நீங்கள் தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் உங்கள் பணிகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். திட்டமிட்டு அதன்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி / இருமல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் அன்றாட செயல்களை கவனமாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சஞ்சலமான உணர்வுகளால் பாதிக்கப் படுவீர்கள். ஆன்மீக நடவடிக்கைகள் அமைதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படாது. கூடுதல் செலவுகள் மற்றும் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் மகிழ்சிகரமாக இருக்காது. ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நம்பிக்கையான, நன்மை தரும் நாள். இன்று பல நன்மைகள் விளையும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

மூத்தவர்களின் மூலம் பணவரவு பரிசாக கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் சிறந்த வெற்றி காண இயலாது. இன்று நீங்கள் புதிய விஷயங்களை கற்க விரும்புவீர்கள். ஆனால் சில காரணங்களால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் செயல்களில் பொறுமையை கையாளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து உங்கள் துணையிடம் கோப உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

பண வரவுக்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

பதற்றம் காரணமாக நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -17.07.2025




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும். மன உளைச்சல் காரணமாக தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாள். எதிர்பாராதவிதமாக நன்மை கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். விருந்தினர்களின் திடீர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சில அசௌகரியங்கள் காணப்படும். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந்துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும். என்றாலும் சேமிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும்.

அதிகவேலைகாரணமாகபதற்றமும்மூட்டுகளில்வலியும் ஏற்படலாம். இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்கும். பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

உங்கள் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்பாக உணர்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக இன்று ஸ்திரமான முன்னேற்றகரமான ஆரோக்கியம் காணப்படும்.

